**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல் இரசாயணம், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனம் 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல் இரசாயணம், மூலக்கூறு உயிரியல், மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல் இரசாயணம், மூலக்கூறு உயிரியல், மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிலைவரம், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு, காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சட்டங்கள், விதிகளுடனான இணக்கமின்மை

பீஈடீ 25 ஆம் இலக்க 2004 யூலை 29 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிறுவனத்தினால் தமது நிதிகளை முதலீடு செய்யும் போது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது நிறுவனத்தினால் வைப்புச் செய்யப்பட்ட முறையே ரூபா 1,460,360 மற்றும் ரூபா 227,771 தொகைகளான நிலையான வைப்புக்களுக்காக சுற்றுநிருபத்தின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்திற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் இரண்டாவது மற்றும் மூன்றாவது மொழித் தேர்ச்சிகள் தொடர்பாக சம்பளங்கள் மற்றும் ஊக்குவிப்புப் படிகளாக மீளாய்வாண்டில் ரூபா 13,570 செலுத்தப்பட்டிருந்தது. பீடீ/ஐஎன்எஸ்/சிஎல்யூஎஸ் - ஏ/078 ஆம் இலக்க 2003 யூலை 18 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளத்திற்கு மேலதிகமாக படிகள் எதுவும் சேர்க்கப்பட்டு பங்களிப்புத் தொகை கணிக்கப்பட முடியாது என்ற போதிலும் பல்கலைக்கழக கல்விசார் படிகள் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு கணிக்கப்பட்டதன் காரணமாக பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் ரூபா 81,255 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் தொழிற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மீண்டுவரும் செலவுகளுக்காக அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக்கொள்வதற்கு முன்னர் ரூபா 28,568,771 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 25,429,090 ஆக இருந்தது. மீண்டுவரும் செலவுகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 26,200,000 அரசாங்க மானியத்தின் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ருபா 2,368,772 வரை குறைவடைந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 28,850,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக அந்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 3,420,909 மிகையாக மாற்றப்பட்டிருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான ரூபா 5,789,682 தொகையான வீழ்ச்சிக்கு ரூபா 1,738,316 வருமானக் குறைவும் ரூபா 4,501,366 செலவு அதிகரிப்பும் விசேடமாக தாக்கத்தினை விளைவித்துள்ளது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 2.2.1 செயலாற்றல்

----------------------

(அ) மீளாய்வாண்டின் போது 02 விஞ்ஞான முதுமானி பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகள் தொடர்பாக பதிவுசெய்து கொண்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 19 ஆக இருந்ததுடன் பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்த மாணவர்களின் எண்ணிக்கை 10 ஆக இருந்தது. வருடாந்தம் ஒரு மாணவனுக்கான சராசரிக் கிரயம் ரூபா 381,447 ஆக இருந்தது. இதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 19,215 ஆல் அதிகரித்திருந்தது.

(ஆ) கலாநிதி பட்டப்பின்படிப்பு கற்கை நெறிக்காக பதிவுசெய்து கொண்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது ஒரு மாணவன் மாத்திரம் பட்டப்படிப்பினை பூரணப்படுத்தியிருந்தார். கற்கை நெறிக்காலம் (முழு நேரம்/ பகுதி நேரம்) 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டதாகும்.

(இ) உளவியல் பட்டப்பின்படிப்பு கற்கை நெறிக்காக பதிவுசெய்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 12 ஆக இருந்ததுடன் ஒரு மாணவர் மாத்திரம் பட்டப்படிப்பினை பூரணப்படுத்தியிருந்தார். கற்கை நெறிக்காலம் (முழு நேரம்/ பகுதி நேரம்) 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டதாகும்.

(ஈ) 2010 ஆம் ஆண்டு இறுதியில் பட்டப்பின்படிப்பு கற்கை நெறியினைப் பயின்று பூரணப்படுத்திய மாணவர்களின் எண்ணிக்கை 41 ஆக இருந்ததுடன் அது கலாநிதி பட்டப்பின்படிப்பு 07 ஆகவும் உயிரியல் விஞ்ஞானம் முதுமானி கற்கைநெறி 20 ஆகவும் உயிரணு மற்றும் மூலக்கூறு நோய்த்தடுப்பு விஞ்ஞான முதுமானி கற்கைநெறி 14 ஆகவும இருந்தன.

(உ) 08 துறைகளை உள்ளடக்கும் வகையில் 29 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. இதில் 10 ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டிருந்தது. 19 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஊ) பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளுக்காக 22 பகுதிநேர விரிவுரையாளர்களின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவர்களினால் 175 மணித்தியாலங்கள் விரிவுரைகள் நடாத்தப்பட்டன. இந்த பகுதிநேர விரிவுரையாளர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் ரூபா 213,550 ஆக இருந்ததுடன் ஒரு மணித்தியால விரிவுரைக்கான கிரயம் ரூபா 1,220 ஆகும்.

(எ) மீளாய்வாண்டின் போது பட்டப்பின்படிப்பு கற்கை நெறி தொடர்பாக 12 பரீட்சைகள் நடாத்தப்பட்டதுடன் அந்த பரீட்சைகள் தொடர்பாக 78 மாணவர்கள் தோற்றியிருந்தார்கள். அனைத்து பரீட்சைகளினதும் பெறுபேறுகள் 2010 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தன.